


# 04 ஆம் அத்தியாயம்
# சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் அரசியல் வளர்ச்சி

16ஆம் நூற்றாண்டிலிருந்து மேலைத்தேசத்தவரின் வருகையுடன் 450 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் ''இலங்கை'' அந்நியர் ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்தது. அதில் 150 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் நிலவிய பிரித்தானியர் ஆட்சி முடிவுற்று 1948ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கை சுதந்திரமடைந்தது. அந்த சுதந்திரம்கூட முழுமையான சுதந்திரமாக அமையவில்லை. ஆயினும் அப்போது வளர்ச்சியடைந்திருந்த அரசியல்கட்சிமுறை, தேர்தல் முறை, பாராளுமன்ற ஆட்சிமுறை, அரசியல் யாப்புச் சீர்திருத்தம் என்பன மூலம் பூரண சுதந்திரமானதும் சுயாதீனமானதுமான அரசொன்றை நோக்கிய பயணத்தை நிறைவு செய்து கொள்ளக்கூடிய பின்னணி 1948 ஆம் ஆண்டு கிடைத்த சுதந்திரத்துடன் உதயமாகியது. அதன் பின்னர் பூரண சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதன் பொருட்டு செயற்பட்ட இலங்கை அரசியலில் அரசியல் கட்சி முறை வளர்ச்சி, தேர்தல்கள், குடியரசின் தோற்றம் மற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையின் தோற்றம் முதலிய பிரதான விடயங்களைக் கற்பது இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.


சுதந்திரச் சதுக்கம்

## இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்ததன் பின்னணி :

- டொனமூர் யாப்புச் சீர்திருத்தத்தின் பின்னர் பாராளுமன்ற ஆட்சிமுறை ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இலங்கை அரசியல் தலைவர்கள் செயற்பட்டமை.
- உலக மகாயுத்தங்களின் முடிவில் குடியேற்ற நாடுகளில் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான மனப்பாங்கு வேகமாக வளர்ச்சியடைந்தமை.

- மேற்கு நாடுகளில் ஆங்கில மொழிமூலம் கல்வி கற்று பல்வேறு அரசியல் தத்துவ அறிவினைப் பெற்ற இடதுசாரித் தலைவர்களின் தலைமையிலான இடதுசாரி இயக்கங்கள் ஆரம்பமானமை.
- இடதுசாரி இயக்கங்கள் விரிவடைந்தபோது ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கைகளும் வேகமாக வளர்ச்சியடைந்தமை.
- இந்தியாவில் மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு போன்ற ஏகாதிபத்திய எதிர்ப்புவாதத் தலைவர்களால் அந்நாடு சுதந்திரம் பெற்றுக் கொண்டமை.
- இலங்கைத் தலைவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 1946 இல் வருகை தந்த சோல்பரி ஆணைக்குழுவின் சிபாரிசின்படி 1947இல் யாப்புச் சீர்திருத்தத்தைப் பெற்றுக் கொண்டமை.
- 1948ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆந் திகதி முதல் இலங்கை சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டமை.

### சுதந்திரம் பெறுதல்

இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவது என முடிவெடுத்த பின்னர் பிரித்தானியா அதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்தது. 1947ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அன்றைய பிரதமர் டி.எஸ்.சேனாநாயக்கஅவர்களுடன் மூன்று ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

**பாதுகாப்பு ஒப்பந்தம்**

திருகோணமலை கடற்படை முகாமிலும் கட்டுநாயக்க விமான நிலையத்திலும் பிரித்தானியப் படைகளை வைத்திருப்பதற்கு இலங்கை இணங்குதல்.

**வெளிவிவகார ஒப்பந்தம்**

பிரித்தானிய ஏகாதிபத்தியத்திலிருந்து சுதந்திரமடைந்த நாடுகளுடன் தொடர்புகளை மேற்கொள்ளும்போது பிரித்தானியா விதிக்கும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதற்குச் சம்மதித்தல்.

**அரச ஊழியர் தொடர்பான ஒப்பந்தம்**

இலங்கையில் பணியாற்றும் ஆங்கிலேய அரச ஊழியர்கள் தொடர்ந்தும் பணியாற்றும்போது அவர்களின் ஓய்வூதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதி என்பவற்றைத் தங்கு தடையின்றி வழங்குவதற்கு இலங்கை சம்மதித்தல்.

❖ பிரித்தானியா மேற்கொண்ட தீர்மானத்தின்படி 1947இல் சோல்பரி யாப்பை அடிப்படையாகக் கொண்டு சுதந்திரத்தை வழங்குவதற்காக இலங்கைச் சுதந்திரச் சட்டம் அமுலுக்கு வந்தது.

## இலங்கைச் சுதந்திரச் சட்டம்

இது பிரித்தானியப் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டு 1947ஆம் ஆண்டு டிசம்பர் 3ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தின் முன்வைக்கப்பட்ட சட்டமாகும். இலங்கைப் பாராளுமன்றத்தினதும் அனுமதியைப் பெற்றுக் கொண்ட பின்னர் அது 1947ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வந்த சோல்பரி யாப்பின் ஒரு சட்டபூர்வ அம்சமாகியது.

**சுதந்திர சட்டத்தின் பிரதான வாசகங்கள்**



காலிமுகத்திடலில் உள்ள
இலங்கையின் பழைய பாராளுமன்றம்

- 1948ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி முதல் இலங்கை பிரித்தானியாவின் குடியேற்ற நாடு அல்ல.
- இலங்கை தொடர்பாகப் பிரித்தானியப் பாராளுமன்றம் பெற்றிருந்த ஆணையிடும்,சட்டங்களைப் பிறப்பிக்கும் அதிகாரங்கள் இழக்கப்பட்டுள்ளன.
- இலங்கைப் பாராளுமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரங்கள் விரிவடைந்துள்ளன.

## 1948 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு

சுதந்திரச் சட்டத்தைப் பிரதானமாகக் கொண்டு புதிய சீர்திருத்தங்களை உள்ளடக்கிய யாப்பு 1947ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்தது. இந்த யாப்பின் இயல்புகள் பின்வருமாறு அமைந்தன.

பிரித்தானிய முடி

இப்புதிய யாப்பின்படி பெயரளவு நிர்வாகம் ஒன்று காணப்பட்டது. 1972ல் குடியரசு யாப்பு அறிமுகமாகும் வரை பிரித்தானிய முடி அப்பதவியை வகித் தது.

முடியின் பிரதிநிதியாக ஆளுநர் நாயகம் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் சுதந்திர இலங்கையின் பெயரளவு நிர்வாகியாக செயற்பட்டார்.

சட்டத்துறை


1948ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின் கீழ் மக்கள் பிரதிநிதிகள் சபை, செனட் சபை எனும் அங்கங்களைக் கொண்டதாகப் பாராளுமன்றம் காணப்பட்டது.

எனவே அது இருமன்றங்களாக் கொண்ட பாராளுமன்றமாக விளங் கியது.

நிர்வாகத் துறை

1948ஆம் ஆண்டின் யாப்பின் 47ம் வாசகத்தின்படி நிர்வாக நடவடிக் கைகளுக்குப் பொறுப்பாக அமைச் சரவை காணப்பட்டது. அது பிரதிநிதிகள் சபைக்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

அமைச்சரவையின் தலைவராக பிரதமர் காணப்பட்டார்.


ஹென்றி மங்க் மேசன் மூவர் அவர்கள்

நீதித்துறை

அனைத்து நீதிமன்ற நடவடிக்கைகளும் நீதிச்சேவைகள் ஆணைக்குழு மூலமாக மேற்கொள்ளப்பட்டன.

குற்றவியல் வழக்குகள் தொடர்பான மேன்முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரம் பிரித்தானிய பிரிவுக் கவுன்சிலிடமே காணப் பட்டது. பிரித்தானியப் பிரபுக்கள் சபையே பிரிவுக் கவுன்சிலாகச் செயற்பட்டது.




ஒலிவர் குணதிலக அவர்கள்

இந்த அரசியல் யாப்பின்படி இலங்கையின் முதலாவது ஆளுநர் நாயகமாக திருவாளர் ஹென்றி மங்க் மேசன் மூவர் (1948 - 1949) பதவி வகித்தார். அதன் பின்னர்

- சோல்பரி பிரபு (1949 - 1954)
- ஒலிவர் குணதிலக (1954 - 1962)
- வில்லியம் கொபல்லாவ (1962 -1972)

என்போர் ஆளுநர் நாயகம் பதவியை அலங்கரித்தனர்.



வில்லியம் கொபல்லாவ அவர்கள்

- 1948ஆம் ஆண்டு முதல் 1970ஆம் ஆண்டு வரை இலங்கையின் அரசியல் யாப்பையும் அரசியலின் போக்கையும் பரீட்சித்துப் பார்க்கும்போது தெளிவாகத் தெரியும் சில அம்சங்களை அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. அவற்றுள் பிரதான விடயங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.
    - 1948இல் அரசியல் யாப்பை மாற்றி அமைத்துக் கொள்வதில் மக்களிடையே காணப்பட்ட பலத்த எதிர்பார்ப்பு.
    - அரசியல் கட்சிகளின் தோற்றமும் வளர்ச்சியும்
    - தேர்தலுடன் ஒன்றிணைந்த நிகழ்கால அரசியல் பிரச்சினைகளும் புதிய போக்குகளும்.

- 1956இல் ஆட்சிக்கு வந்த பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா அவர்கள் யாப்புச் சீர்திருத்தத்திற்கான முயற்சியை மேற்கொண்ட போதிலும் அது பயனளிக்கவில்லை.


## இந்திய இலங்கை குடியுரிமைச் சட்டம்

20ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் இலங்கை அரசியலில் ஏற்பட்ட முக்கிய நிகழ்வுகளாக 1948இன் இலங்கைக் குடியுரிமைச் சட்டம், 1949இன் இந்திய பாகிஸ்தானிய பிரஜைகள் தொடர்பான குடியுரிமைச் சட்டம் என்பனவற்றைக் குறிப்பிடலாம். அதன் மூலம் சுதந்திர இலங்கையில் வாழ்ந்து வந்த இந்திய - பாகிஸ்தானியர்களுக்கு சட்டபூர்வமான குடியுரிமையை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## அரசியல் கட்சிகளின் தோற்றம்

1948ஆம் ஆண்டு முதல் 1972ஆம் ஆண்டின் இடைப்பட்ட காலகட்டத்தில் இலங்கையில் அரசியல் கட்சிகள் பல உருவாகின.

## இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி



அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம்

இந்திய இலங்கை குடியுரிமைச் சட்டம் மூலம் ஆங்கிலேயரால் இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கு வழங்கப்பட்டிருந்த உரிமைகளைப் பறித்துக் கொண்டதாக அரசின் மீது குற்றம் சுமத்திய **தமிழ்க் காங்கிரஸ்** கட்சியின் அங்கத்தவர் சிலர் அமரர் எஸ்.ஜே.வி. செல்வ நாயகம் தலைமையில் ஒன்றிணைந்து அரசாங்கத்திலிருந்து வெளியேறி **'இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி'**யை ஆரம்பித்தனர். இது **''சமஷ்டிக் கட்சி''** எனப்பட்டது.

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

1951ஆம் ஆண்டு எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்க அவர்கள் தமது ஆதரவாளர்கள் சிலருடன் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி டீ.எஸ்.சேனாநாயக்கவின் அரசாங்கத்துக்கு எதிராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்தார்.

அதுவரை காலமும் அதிகாரத்தில் இருந்த மேற்குலகம் சார்பான கொள்கையுடைய ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சவாலாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒரு நடுத்தரக் கொள்கையுடைய கட்சியாக அரசியலில் செல்வாக்குப் பெற்றது. அது பூரண சுதந்திரத்தை வெற்றி கொண்டு பிரித்தானியாவிடமிருந்து முழுமையான விடுதலை பெற்ற நாடாக இலங்கையைச் கட்டியெழுப்பும் எதிர்பார்ப்புடன் பொது மக்களின் அபிப்பிராயப்படி செயற்படும் தலைவரான பண்டாரநாயக்கவின் தலைமையைப் பெற்றது.

## இடதுசாரிக் கட்சிகள்

இலங்கை சமசமாஜக் கட்சியின் ஆரம்ப அங்கத்தினரான திரு.பிலிப் குணவர்த்தன அவர்கள் 1947ஆம் ஆண்டுத் தேர்தலின் பின்னர் புரட்சிகர சமசமாஜக் கட்சியை ஆரம்பித்தார். 1943ஆம் ஆண்டு முதல் பிளவுற்ற இடதுசாரிக் கட்சிகளை 1951ஆம் ஆண்டு முதல் இணைப்பதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்ட போதிலும் அதில் லங்கா சமசமாஜக் கட்சியும் போல்சவிக் லெனினிசக் கட்சியும் மட்டுமே இணைந்தன. அதற்கேற்ப லங்கா சமசமாஜக் கட்சி, கொமியூனிஸ்ட் கட்சி, புரட்சிகர சமசமாஜக் கட்சி எனும் மூன்று இடதுசாரிக் கட்சிகள் காணப்பட்டன.


இலவச விநியோகத்திற்காக

### பிரதமர் டி.எஸ்.சேனாநாயக்க அவர்களின் மறைவு:

1952 இல் பொதுத் தேர்தலுக்கு நாள் குறித்திருந்த வேளையில் இலங்கையின் முதலாவது பிரதமர் திரு.டி.எஸ் சேனாநாயக்க அவர்கள் 1952ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி அகால மரணமடைந்தார். அதனைத் தொடர்ந்து அவரது மகனான டட்லி சேனாநாயக்க அவர்கள் பிரதமரானார்.பிரதமர் பதவிக்கு தெரிவு செய்தல் தொடர்பில் டட்லி சேனநாயக்காவிற்கும் ஜோன் கொத்தலாவலவுக்கும் இடையில் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டன.

### 1952ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்

நாடு சுதந்திரமடைந்தது முதல் ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் இரண்டாவது பிரதமர் டட்லி சேனாநாயக்க அவர்கள், தனது பதவிக் காலம் முடிவடைய 1952ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆம் திகதி பாராளுமன் றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்தினார். இத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சிறப்பான வெற்றியைப் பெற்றது. மீண்டும் பிரதமர் பதவியைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு திரு.டட்லி சேனாநாயக்கவுக்குக் கிடைத்தது.

இத்தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக எஸ்.டபிள்யு.ஆர் டி. பண்டாரநாயக்க தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, திரு எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக்கட்சி, இடதுசாரிக் கட்சிகள், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்பன போட்டியிட்டபோதிலும் அவற்றையெல்லாம் தோல்வியடையச் செய்து 54 ஆசனங்களைக் கைப்பற்றிக் கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு இயலுமாய் இருந்தது.

### டட்லி சேனாநாயக்க பதவி விலகல்

- 1953 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக அரிசிவிலை அதிகரித்தமையால் அரசாங்கத்துக்கு எதிரான பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.
- என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டி. சில்வா, பிலிப் குணவர்த்தன முதலிய இடதுசாரித் தலைவர்கள், சமசமாஜக் கட்சியுள்ளிட்ட இடதுசாரிக் கட்சிகள், தொழிற்சங்கங்கள் முதலியவற்றின் உதவியுடன் அன்றாட நடவடிக் கைகளை ஸ்தம்பிக்கச் செய்யும் வண்ணம் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அதனையே ‘ஹர்த்தால்’ என்று குறிப்பிடுவர்.
- நாடு முழுவதும் இந்த ஹர்த்தால் பரவியது.
- பாராளுமன்றத்தினுள்ளும் அரசுக்கு எதிரான நடவடிக்கைகள் தலை தூக்கியமையால் பிரதமர் டட்லி சேனாநாயக்க அவர்கள் பதவி விலகினார்.
- எனவே வெற்றிடமான பிரதமர் பதவிக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான சேர்.ஜோன் கொத்தலாவல அவர்களை அன்றைய ஆளுநர் நாயகமான ஒலிவர் குணதிலக அவர்கள் தனது சொந்த விருப்பின்படி நியமனஞ் செய்தார்.

## பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவல அவர்களின் ஆட்சிக்காலம்

1953ஆம் ஆண்டு முதல் 1956ஆம் ஆண்டு வரை பிரதமர் பதவி வகித்த சேர். ஜோன் கொத்தலாவல அவர்களின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள் சில பின்வருமாறு:

1954 இல் கொழும்புத் திட்ட மகாநாடு கூட்டப்பட்டது.

1955 இல் ஐ.நா சபையில் இலங்கை அங்கத்துவம் பெற்றது. (United Nations Organization)

பிரதமர் சேர்.ஜோன் கொத்தலாவல
1953 - 1956

1955ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி முதல் 24 திகதி வரை இந்தோனேஷிய பான்டுங் நகரில் ஆசிய - ஆபிரிக்க நாடுகளின் சம்மேளனத்தில் இலங்கையும் கலந்து கொண்டது.

இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளர் பிரச்சினையைக் கலந்துரையாடி 1954 இல் நேரு - கொத்தலாவல ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

## பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவல அவர்களின் ஆட்சிக் காலத்தில் முகங்கொடுக்க நேரிட்ட பிரச்சினைகள்

- ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் மற்றும் கொள்கை தொடர்பாக மக்கள் அதிருப்தியடைந்தமை.
- எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்களின் தேசிய உணர்வு மிக்க கொள்கையுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரபல்யமடைந்தமை.
- தேசிய கலாசாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் மக்கள் எதிர்பார்ப்பினை நிறைவேற்றுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியால் முடியாமற் போனமை.
    - ஏகாதிபத்தியவாதிகளின் ஆட்சிக் காலத்தைப் போன்று ஆங்கிலமே அரச கரும மொழியாகத் தொடர்ந்து நிலவியமை.
    - தேசிய மொழிகளில் கல்வி பயின்றோருக்குத் தொழில் வாய்ப்புகள் இல்லாமல் போனதுடன் அவர்களுக்குரிய மிகச் சொற்பமான தொழில்களின் சம்பளமும் மிகக் குறைவாயிருந்தமை.
    - பௌத்த சமயத்திற்கும் பிக்குகளுக்கும் உரிய கௌரவம் வழங்கப்படாமை.

இக் காரணங்களால் சேர்.ஜோன் கொத்தலாவலவின் ஆட்சி மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்தது.


இலவச விநியோகத்திற்காக

பிரச்சினையான சூழ்நிலையில் அரசாங்கத்தின் உரிய பதவிக்காலத்துக்கு முன்னரே பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தும் நிர்ப்பந்தம் சேர். ஜோன் கொத்தலாவல அவர்களுக்கு ஏற்பட்டது.

## 1956ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல்

1956ஆம் ஆண்டு பெப்ரவரி 18 ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் ஏப்ரல் மாதம் 5,7 மற்றும் 10 ஆம் திகதிகளில் தேர்தலை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

★ 1956ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல் இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கியமான நிகழ்வாகும். அதற்குப் பங்களிப்பு செய்த காரணிகள் பலவாகும்.

- ❖ சுதந்திரம் அடைந்தது முதல் ஆளும் கட்சியாகவிருந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக சுயாதீன அங்கத்தவர்களும் ஏனைய அரசியல் கட்சிப் பிரதிநிதிகளும் மக்கள் ஐக்கிய முன்னணி எனும் பெயரில் அரசியல் அமைப்பொன்றை நிறுவிக் கொண்டனர்.
- ❖ டட்லி சேனாநாயக்க சேர். ஜோன் கொத்தலாவல முதலிய முதலாளித்துவக் கொள்கையுடைய ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களுக்குப் பதிலாக நடுநிலைக் கொள்கைவாதியான பண்டார நாயக்க, இடதுசாரிக் கொள்கையுடைய என்.எம்.பெரேரா முதலிய தலைவர்கள் இலங்கை அரசியல் களத்தில் தலைமைத்துவம் பெற்றனர்.
    - 1956 இல் ஆட்சிக்கு வந்த பிரதமர் பண்டரநாயக்க அவர்கள் 1948ஆம் ஆண்டு முதல் செயற்பட்ட வெளிவிவகார, பாதுகாப்பு ஒப்பந்தங்களை இரத்துச் செய்தார். இதன் மூலம் இறையாண்மையுள்ள சுதந்திர அரசாக நாடு எழுச்சி பெறுவதற்கு வழிவகுக்கப்பட்டது.
- ❖ தேசியமொழி, சமயம், தேசிய கலாசாரம், தேசிய சமூகம், தேசிய பொருளாதாரம் என்பவற்றை மதித்துச் செயற்படும் கொள்கை நடைமுறைக்கு வந்தது.
    - சிங்கள மொழி மட்டும் அரச கரும மொழியாகத் தீர்மானிக்கப்பட்டதுடன் தமிழ் மொழிக்கும் உரிய இடம் வழங்கப்பட்டது.

- பௌத்த சமயத்தை எழுச்சியடையச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டது.
- பிரதமர் முதற்கொண்டு அமைச்சர்கள் அனைவரும் முக்கிய வைபவம் ஒன்றின்போது தேசியக் கலாசாரத்திற்கு முதன்மையான இடத்தை வழங்கினர்.
- தேசிய விவசாயத் துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**இத்தேர்தலில் போட்டியிடுவதற்கு**

எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டார நாயக்காவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பிலிப் குணவர்த்தனாவின் புரட்சிகர சமசமாஜக் கட்சி, விஜயானந்தா தஹநாயக்காவின் பாஷாபெரமுன, ஐ.எம்.ஆர்.ஏ. ஈரிய கொல்ல அவர்களின் சுயேட்சைக் குழுவினர் ஆகியோர் இணைந்து ஐக்கிய முன்னணி எனும் பெயரில் கூட்டணி ஒன்றை உருவாக்கிக் கொண்டனர்.

**மக்கள் ஐக்கிய முன்னணி வெற்றி பெறுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்**

- ❖ பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரமடைந்த பின்னர் மக்கள் எதிர்பார்த்த தன்னாதிக்கமும் இறைமையுடைய பூரண சுதந்திர குடியாட்சியைப் பெறுவதற்குத் தேவையான பின்னணி மக்கள் ஐக்கிய முன்னணியால் உருவாக்கப்பட்டமை.
- ❖ பௌத்த பிக்குகள், தேசிய வைத்தியர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் எனும் ஐந்து மகா சக்திகள் ஒன்றிணைந்து செயற்பட்டமை.
- ❖ பண்டாரநாயக்க அவர்கள் இடது சாரித் தலைவர்களையும் இணைத்துக் கொண்டு நடாத்திய தேர்தல் பிரசாரப் பணியின் சக்தி வாய்ந்த தன்மை.
- ❖ தேசிய சக்திகளை எதிர்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு இயலாமற் போனமை.

இத்தேர்தலில் வெற்றியடைந்த மக்கள் ஐக்கிய முன்னணிக் கட்சியின் தலைவர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க அவர்கள் 1956 இல் இலங்கையின் பிரதமரானார்.

## பிரதமர் திரு எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்க அவர்களின் செயற்பாடுகள்

**பிரதமர் பண்டாரநாயக்காவின் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள் (1956 - 1959)**

- இலங்கை ஒரு குடியரசாக வேண்டும். என்ற தீர்மானம் எடுக்கப் பட்டு அதற்காகப் பாராளுமன்றத்தில் தெரிவுக் குழு ஒன்று அமர்த்தப்பட்டது.
- பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் தடைகளைத் தகர்த்து 1947இல் கையொப்பம் இடப்பட்ட வெளிவிவகார, பாதுகாப்பு ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்பட்டன.
- தேசிய கைத்தொழில், விவசாய அபிவிருத்தி
- சிங்களம் அரசகரும மொழியாக அங்கீகாரம் பெறுதல்
- வெளிநாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தும் போது வல்லரசு அணிகளைச் சேர்வதில்லை எனும் தீர்மானம் (அணிசாராக் கொள்கையின் ஆரம்பம்)
- தேசியமயமாக்கல் செயற்பாடு விரிவாக்கப்பட்டமை. உ-ம் துறைமுகம் போக்குவரத்து
- இந்தியா - இலங்கை உறவு சிறப்பாகப் பேணப்பட்டது.

## பிரதமர் பண்டாரநாயக்கவின் மரணம்

1959ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் உள்ளே ஏற்பட்ட அபிப்பிராய பேதங்களின் விளைவாக செப்டம்பர் மாதம் 26ஆம் திகதி கொலையாளி ஒருவனால் பிரதமர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிர் நீத்தார். அதன் பின்னர் அமைச்சரவை முடிவின்படி டபிள்யு.தஹநாயக்க அவர்கள் சிறிது காலம் பிரதமர் பதவியை வகித்தார்.

1956 இல் புரட்சிகரமான முறையில் ஆட்சியமைத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு 1959 இன் இறுதிப் பகுதியில் அதன் தலைவரும், இடதுசாரி நண்பர்களும், ஐக்கிய பிக்குமார் முன்னணியும் இல்லாமலான நிலையொன்று உருவானது. ஆளும் கூட்டணிக்குள் ஏற்பட்ட பூசல்களால் தொடர்ந்தும் அந்த அரசாங்கத்தைக் கொண்டு செல்வது சிரமமான காரியமாயிற்று.

## 1960ஆம் ஆண்டு மார்ச் பொதுத் தேர்தல்

பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் 1960ஆம் ஆண்டு மார்ச் 19ஆம் திகதி பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அதில் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுக் கொள்ள முடியாமல் போனது.

| | |
|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 50 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 46 |
| ஏனைய கட்சிகள் | 55 |

இந்தச் சந்தர்ப்பத்தில் டட்லி சேனாநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி இன்னும் சில கட்சிகளுடன் இணைந்து புதிய அரசாங்கத்தை அமைத்தது. ஆயினும் புதிய பாரளுமன்றத்தின் ''சிம்மாசனப் பிரசங்க உரை'' முடிவில் நடைபெற்ற வாக்கெடுப்பில் தோல்வியடைய பாராளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்பட்டதுடன் மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் நடாத்தப்பட்டது.

## 1960ஆம் ஆண்டு ஜுலை பொதுத் தேர்தல்

1960ஆம் ஆண்டு ஜுலை 20ஆம் திகதி இடம்பெற்ற தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் அக்கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுள் ஒருவரான சீ.பீ.டி சில்வா அவர்களால் முன்னெடுக்கப்பட்டது. இத்தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்கள் மறைந்த தனது கணவரின் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக மக்கள் ஆணையைக் கோரினார். இத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றியீட்டியது.

★ 1960ஆம் ஆண்டு ஜுலை மாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தல் முடிவுகளின்படி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க இலங்கையின் பிரதமரானார். அதன் மூலம் உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமையைப் பெற்றார்.

### திருமதி.ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலம்

**பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்களின் செயற்பாடுகள். (1960 - 1964)**

- தேசியமயத்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்தல் உதாரணமாக இலங்கை வங்கி, தனியார் பாடசாலைகள்
- 1956இல் நிறைவேற்றப்பட்டு செயற்படுத்தப்படுவதற்கு ஐந்து ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்டிருந்த 'அரச மொழிச் சட்டத்தை' முழுமையாகச் செயற்படுத்தல்
- தேசியப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான கொள்கையைப் பின்பற்றல்
- இந்தியத் தோட்ட தொழிலாளர்களின் பிரஜாவுரிமைப் பிரச்சினையை தீர்ப்பதற்காக 1964இல் இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி அவர்களுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளல்.
- இலங்கை சமசமாஜக் கட்சியுடனும், கொமியுனிஸ்ட் கட்சியுடனும் இணைந்து ''ஐக்கிய முன்னணியை'' நிறுவிக் கொள்ளல்.

## ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆட்சி முடிவுறுதல்

- திருமதி பண்டாரநாயக்கவின் சமூகமய, மக்கள் மயக் கொள்கைகளை உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் எதிர்த்தமை.
- 1962 இல் தனியார் பாடசாலைகளை அரசமயப்படுத்தியமையால் சில குழுக்கள் அரசாங்கத்துக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தமை.
- உலகப் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கை அரசாங்கமும் முகங்கொடுக்க நேர்ந்தமை. (உதாரணம் : பொருட்களின் விலை உயர்வு)
- ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து சீ.பீ.டி. சில்வா தலைமையில் 14 உறுப்பினர்கள் எதிர்க்கட்சியில் சேர்ந்தமை.

## 1965ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்ட பூசலால் அந்த அரசாங்கமும் குறிப்பிட்ட காலம் முடிவடைய முன்னர் கலைக்கப்பட்டு, பொதுத் தேர்தலொன்றை நடாத்த வேண்டி ஏற்பட்டது. அதன்படி 1965ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொதுத் தேர்தல் ஒன்று இடம் பெற்றது.

இத்தேர்தலில் வெற்றியீட்டிய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் டட்லி சேனாநாயக்க அவர்கள் நான்காவது முறையாகப் பிரதமர் பதவியை வகித்தார். தேர்தல் வெற்றியின் பின்னர் சிங்கள அடிப்படை வாதக் கட்சி கள் சிலவற்றுடனும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுடனும் கூட்டணி ஒன்றை ஏற்படுத்திக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி தேசிய அரசாங்கமொன்றை அமைத்தது.

### பிரதமர் டட்லி சேனாநாயக்கவின் அரசாங்கம் எதிர்கொண்ட சவால்கள்

- இனங்களிடையே ஏற்பட்ட வேற்றுமையைத் தீர்க்க முடியாத பட்சத்தில் தமிழ்க் கட்சியான சமஸ்டிக் கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறியமை
- பொருளாதார நெருக்கடிகள் காரணமாக உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்தமையும் சென்மதி நிலுவைப் பற்றாக்குறை அதிக ரித்தமையும்.

### 1970ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல்

குறிப்பிட்ட காலம் முடிவடைய டட்லி சேனாநாயக்க பாரளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலொன்றுக்கான ஆயத்தங்களை மேற்கொண்டார். 1964ல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் சமசமாஜக் கட்சி கொமியூனிஸ்ட் கட்சி என்பன ஒன்றிணைந்து கூட்டணி அமைத்து தேர்தலுக்கு முகங்கொடுத்தன. இத்தேர்தலில் வெற்றியீட்டிய ஐக்கிய முன்னணி 1970இல் அரசாங்கத்தை அமைத்ததுடன் அக்கூட்டணியின் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க இரண்டாவது தடவை இலங்கையின் பிரதமரானார்.

### 1972ஆம் ஆண்டின் முதலாம் குடியரசு யாப்பும் இலங்கை குடியரசாதலும்.

### 1972ஆம் ஆண்டு குடியரசு யாப்பு தயாரித்தல்

1970இல் ஆட்சிக்கு வந்த ஐக்கிய முன்னணி - அரசாங்கம் தமது கொள்கைப் பிரகடனத்தில் கூறியதன்படி புதிய அரசியல் யாப்பொன்றை வரைவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டது. அதன் முதற் கட்டமாக பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்கள் 1970ஆம் ஆண்டு ஜுலை 19ஆம் திகதி யாப்புத் திட்டச் சபையின் முதலாவது கூட்டத்தை கொழும்பு றோயல் கல்லூரியின் நவரங்கல மண்டபத்தில் நடத்தினார். புதிய யாப்புத் திட்டச் சபை சிறப்பான முறையில் திட்டமிட்ட அடிப்படையில் செயற்படுவதற்காக அதற்குத் தலைமைத்துவம் வழங்குவதற்கு ஓர் அமைச்சர் பதவி உருவாக்கப்பட்டதுடன் அப்பதவி இலங்கை சமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வாவுக்கு வழங்கப்பட்டது.

## செயற்பாடு



வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களையும் இணைத்து இலக்கிய மன்றத்துக்கு யாப்பு ஒன்று தயார் செய்யுங்கள்.

### 1972ஆம் ஆண்டு யாப்பின் முக்கிய விடயங்கள்

- இலங்கை என்று அழைக்கப்பட்ட இந்த நாடு ''ஸ்ரீ லங்கா'' என அழைக்கப்படுதல்
- பிரித்தானியப் பேரரசுடனான சகல விதமான கூட்டுக்களினின்றும் விடுபட ஏற்பாடுகளைத் தயாரித்தல்.
- அரசியல் யாப்பு நாட்டின் உயர்வான சட்டம் என்பதை ஏற்றுக் கொள்ளல்
- இலங்கை ஒரு தன்னாதிக்கமுள்ள நாடு என்பதனை யாப்பின் மூலம் ஏற்றுக் கொள்ளல்
- இறைமையதிகாரம் மக்களிடமிருந்தே பிறக்கின்றது என்பதை ஏற்றுக் கொள்ளல்
- பௌத்த சமயம் முக்கிய இடத்தை வகிப்பதுடன் ஏனைய மதங் களுக்கும் உரிய அந்தஸ்து வழங்கப்படும் எனக் குறிப்பிடல்

### 1972ஆம் ஆண்டு யாப்பின் பிரதான அம்சங்கள்

1. பெயரளவு ஜனாதிபதி
2. தேசிய அரசுப் பேரவை
3. பிரதமரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவை
4. நீதிமன்றத் தொகுதி

இதுவரை இருந்த ஆளுநர் நாயகம் (மகாதேசாதிபதி) பதவி 1972இன் புதிய யாப்புடன் நீக்கப்பட்டது. இதன் பின்னர் பெயரளவு நிர்வாகியாக ஜனாதிபதிப் பதவி அறிமுகப்படுத்தப்பட்டது. ஆளுநர் நாயகத்திற்கு அதிகாரங்கள் தொடர்ந்தும் ஜனாதிபதியால் செயற்படுத்தப்பட்டன. 1948ஆம் ஆண்டு முதல் பெயரளவிலான ஆளுநர் இங்கிலாந்து முடியினால் நியமிக்கப்பட்டார். ஆனால் புதிய யாப்பின் மூலம் பிரதம மந்திரியால் நியமிக்கப்பட்டார்.

அக்காலத்தில் ஆளுநர் நாயகம் (மகா தேசாதிபதி) இருந்த திரு.வில்லியம் கோபல்லாவ அவர்கள் புதிய அரசியல் யாப்பின்கீழ் முதலாவது பெயரளவிலான ஜனாதிபதியானார்.

**தேசிய அரசுப் பேரவை**

இதுவரை பாராளுமன்றம் என அழைக்கப்பட்டது இந்த யாப்பினால் தேசிய அரசுப் பேரவை என்று அறிமுகமானது.

1948ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்ட மேல் சபை 1971இல் நீக்கப்பட்டிருந்தது. அதன்படி செயலில் இருந்த சட்டசபை ஒற்றை மன்றமாக 1972ஆம் ஆண்டு யாப்பில் தொடர்ந்து செயற்பட்டது.

## தேசிய அரசுப் பேரவையின் செயற்பாடுகள்

- மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட தேசிய அரசுப் பேரவை, சட்டம் இயற்றும் அதிகாரமுடையதாக இருந்தது.
- தேசிய அரசுப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதா சட்டமாவதற்கு சபாநாயகரின் கையொப்பம் பெறவேண்டும்.
- மக்களின் நிதி, நிர்வாகம், சிறந்த பரிபாலனம் என்பவற்றின் ஊடாக நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், மக்களின் தேவைகள் இன்னல்களை நீக்க கூடியகவனம் எடுத்தல் என்பன அரசுப் பேரவையின் கடமையாகும்.

## நிறைவேற்று அதிகாரச் செயற்பாடுகள்

★ முன் இருந்த அரசியலமைப்பின்படி நிறைவேற்றுச் செயற்பாடுகள் அமைச்சரவையிடம் இருந்தது. பிரதம மந்திரி அமைச்சரவையின் தலைவராவார்.

## நீதிமன்ற அதிகாரங்களைச் செயற்படுத்தல்

1972ஆம் ஆண்டு அரசியல்யாப்பின்படி புதிய நீதிமன்ற அமைப்பொன்று அறிமுகம் செய்யப்பட்டது. அவை பின்வருமாறு

- உயர் நீதிமன்றம்
- மாவட்ட நீதிமன்றம்
- தொழிலாளர் நீதிமன்றம்
- மேன்முறையீட்டு நீதிமன்றம்
- மஜிஸ்ட்ரேட் நீதிமன்றம்
- அரசியல் அமைப்பு நீதிமன்றம்

உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பவற்றுக்கான நீதிபதிகள் பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவர்.

பிரித்தானிய ஏகாதிபத்திய காலத்தில் நிலவியது போலவே 1948இன் பின்னரும் சில வழக்குகள் தொடர்பாகப் பிரித்தானிய பிரிவுக் கவுன்சிலில் மேன்முறையீடு செய்யப்பட்டது. 1972ஆம் ஆண்டு யாப்பின்படி அது முற்றிலும் நீக்கப்பட்டது. ஸ்ரீலங்காவின் சுயாதீனத்திற்கு இடையூறாக இருந்த அந்த அதிகாரம் நீக்கப்பட்டமை, சுதந்திரத்தின் முழுமையை அடையும் முக்கிய சந்தர்ப்பமாகும்.

## அடிப்படை மனித உரிமைகள்

★ அடிப்படை மனித உரிமைகள் தொடர்பாக முதல் முறையாக அரசியல் யாப்பில் ஒரு பிரிவு சேர்க்கப்பட்டது. இது 1972ஆம் ஆண்டு யாப்பின் விசேட அம்சமாகும்.

## 1977ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல்

★ 1977ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஜே.ஆர்.ஜயவர்த்தனவைத் தலைவராகக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி விசேட வெற்றியைப் பெற்றது.

### 1977ஆம் ஆண்டு பதவியேற்ற அரசாங்கத்தின் இயல்புகள்

- 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 50% ற்கும் மேற்பட்ட வாக்கினைப் பெற்று வெற்றி பெற்றமை.
- பாராளுமன்றத்தில் ஆளுங் கட்சியின் அதிகாரம் அதிகமாக இருந்ததால் எதிர்க்கட்சி பலவீனமடைந்தமை.

பாராளுமன்றத்தில் 5/6 பங்கு பெரும்பான்மையினைப் பெற்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சியால், தேர்தலில் முன்வைத்த புதிய அரசியலமைப்பு ஒன்றினை அமைப்பதில் எவ்வித சிரமமுமிருக்கவில்லை.

## 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பு

இலங்கையில் இப்போது அமுலில் இருந்து வரும் யாப்பு 1978ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ஆந் திகதி நிறைவேறிய ஸ்ரீலங்கா ஜனநாயக சோசலிசக் குடியரசின் யாப்பு ஆகும்.

இந்த யாப்பினை அமைப்பதன் அடிப்படை நடவடிக்கையாக அமைந்தது 1972ஆம் ஆண்டு யாப்புடன் 1977ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இரண்டாம் திருத்தத்தினை உள்ளடக்கி நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிப் பதவியை அறிமுகம் செய்தமையாகும்.


அதுவரை பிரதமராக இருந்த திரு ஜே.ஆர் ஜயவர்த்தன அவர்கள் 1978ஆம் ஆண்டு பெப்ரவரி 4ந் திகதி முதலாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

அதன் பின்னர் அமைக்கப்பட்ட குழுவினால் புதிய அரசியல் யாப்பு வடிவமைக்கப்பட்டது.



### செயற்பாடு

வகுப்பில் அனைத்து மாணவர்களும் ஒன்று கூடி 1972, 1978ம் வருடங்களில் அமுல் செய்யப்பட்ட யாப்புகளின் ஒற்றுமை, வேற்றுமைகளைக் கலந்துரையாடுங்கள்.




நாடு முழுவதும் ஒரே தேர்தல் தொகுதியாகக் கணிக்கப்பட்டு மக்களின் வாக்குகளால் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி 6 வருடங்கள் பதவி வகிக்கக்ககூடியதாக யாப்பின் மூலம் சந்தர்ப்பம் அளிக்கப் பட்டுள்ளது.

### நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் அதிகாரங்களும், சலுகைகளும்

- ஜனாதிபதி அரசாங்கத்தின் தலைவராக இருப்பதுடன், முப்படையின் தலைவராகவும் இருக்கிறார்.
- பாராளுமன்றத்தைக் கூட்டுதல், கலைத்தல் போன்ற அதிகாரங்களும் அவருக்கு உண்டு. அதன் ஆரம்ப அமர்வுகளில் தலைமை வகித்தல், அரசாங்கத்தின் கொள்கைகளை முன்வைத்தல் என்பவை அவற்றுள் உள்ளடங்கும்.
- நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் பதவிக் காலத்தில் அவருக்கு எதிராக எவ்விதக் குற்றச்சாட்டிற்கும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியாது. இது அப்பதவியின் சிறப்பான வரப்பிரசாதமாகும்.

அவருக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் மாத்திரம் கொண்டு வரலாம்.

❖ நீதிமன்றத்தில் குற்றவாளியெனத் தீர்ப்பு வழங்கப்பட்ட ஒருவருக்கு மன்னிப்பு அளித்தல், தண்டனையைக் குறைத்தல், தண்டனையைப் பின்போடுதல் போன்ற அதிகாரங்கள் ஜனாதிபதிக்கு உண்டு.

## பாராளுமன்றத்தின் சட்ட அதிகாரங்களும், பொறுப்புக்களும்

பொதுத்தேர்தலில் 6 வருடங்களுக்குத் தெரிவு செய்யப்படும் பிரதி நிதிகளைக் கொண்ட பாராளுமன்றம் ஒரு சட்ட மன்றமாகும்.

1972ஆம் ஆண்டு தொடக்கம் தேசிய அரசுப் பேரவை என அழைக்கப்பட்ட சட்டமன்றம் 1978ஆம் ஆண்டு புதிய அரசியல் யாப்பின்படி பாராளுமன்றம் என அழைக்கப்படுகின்றது.

பாராளுமன்ற அங்கத்தவர்கள் தொகை 225

- மாவட்ட அடிப்படையில் விகிதாசார முறையில் வாக்கின் மூலம் தெரிவுசெய்யப்படுவோர் 196
- தேசிய பட்டியல் முறைப்படி 29

பாராளுமன்றத்தின் அதிகாரங்கள்

- சட்டம் இயற்றுதல்
- அடிப்படை செயற்பாடுகளை நிர்வகித்தல்
- அபிவிருத்தி வேலைகளைத் திட்டமிடல்

## அமைச்சரவையின் அதிகாரங்கள்

❖ ஜனாதிபதி அமைச்சரவையின் தலைவர் ஆவார்

❖ ஜனாதிபதியால் பிரதம மந்திரி நியமிக்கப்படுவார்

❖ பாராளுமன்ற அங்கத்தவர்களிலிருந்து தெரிவு செய்யப்படும் அமைச்சரவை தொடர்பாக தீர்மானமெடுக்கும் உரிமை ஜனாதிபதியுடையதாகும்.

❖ பாராளுமன்றத்தால் அமுல் செய்யப்படும் சட்டங்களைச் செயற் படுத்தல், வரவு செலவுத் திட்டம் தயாரித்தல் என்பன அமைச் சரவையின் முக்கிய பொறுப்புகளாகும்.

❖ பாராளுமன்ற அமைச்சர்கள் பல்வேறு விடயங்களுக்கும் பொறுப்பாக இருந்து செயற்படுகின்ற போதிலும் அமைச்சரவையின் முடிவு தொடர்பாகப் பாராளுமன்றத்திற்குக் கூட்டாக வகை சொல்வது அவர்களின் பொறுப்பாகும்.

## நீதித்துறை அதிகாரங்கள்

❖ 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள அடிப்படைமனித உரிமைகளைப் பாதுகாத்து நீதியைக் கடைப்பிடிப்பது நீதிபதிகளினதும் நீதி மன்றங்களினதும் பொறுப்பாகும்.



உச்ச நீதிமன்றம்

## அடிப்படை மனித உரிமைகள்

❖ 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்புக்கு அமைவாக முறையாக, விளக்கத்துடன் மனித உரிமைகள் பற்றி 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் 3வது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- விரும்பிய தொழிலைச் செய்வதற்கான சுதந்திரம், சமய சுதந்திரம், சட்டத்தின் முன் சமனாக மதிக்கப்படும் உரிமை என்பன 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் குறிப்பிட்டுள்ள மனித உரிமைகளில் சிலவாகும்.

சட்டம் அல்லது நிர்வாகச் செயற்பாடுகளின் மூலம் இந்த அடிப்படை உரிமைகள் மீறப்படின், குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அதற்கான தீர்ப்பினைப் பெற்றுக் கொள்ளலாம். என இந்த அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விகிதாசார பிரதிநிதித்துவ முறை

❖ பாராளுமன்ற அங்கத்தவர்கள் மாகாணசபை அங்கத்தவர்கள் உள்ளூராட்சி நிறுவனங்களின் அங்கத்தவர்கள் ஆகியோரை விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்யும் முறை இந்த அரசியல் யாப்பின் முக்கிய இயல்பாகும்.

## ஜனாதிபதித் தேர்தல்

- ஜனாதிபதித் தேர்தலில் நாடு முழுவதும் ஒரே தேர்தல் தொகுதியாகக் கணிக்கப்படும்.
- அளிக்கப்பட்டுள்ள வாக்குகளில் அரைவாசிக்கும் அதிகமாக அதாவது 50வீதத்திற்கும் அதிகமாக யாராவது ஒரு வேட்பாளர் பெற்றால் அவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார்.

1972ஆம் ஆண்டின் முதலாவது குடியரசு யாப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்ட திருத்தத்தின் விளைவாக அப்போது பிரதம மந்திரியாக இருந்த திரு.ஜே.ஆர். ஜயவர்த்தன அவர்கள் ஜனாதிபதியானதுடன் 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பின்கீழ் முதல் ஜனாதிபதித் தேர்தல் 1982ஆம் ஆண்டு நடைபெற்றது. அத்தேர்தலில் திரு ஜே.ஆர்.ஜயவர்தன வெற்றியீட்டினார்.

## மக்கள் தீர்ப்பு

- ஜனாதிபதியின் அல்லது உயர் நீதிமன்றத்தின் கட்டளைக்கு அமையவே மக்கள் தீர்ப்பு நடத்துவது தொடர்பாக முடிவு எடுக்கப்படல் வேண்டும்.
- மக்கள் தீர்ப்பில் ஆம் / இல்லை என்று தீர்மான முடிவை மாத்திரமே கொடுக்க முடியும்.

1982இல் பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை நீடித்தல் தொடர்பாக மக்களின் விருப்பத்தைத் தெரிந்து கொள்வதற்கு மக்கள் தீர்ப்பு நடைபெற்றது.



### செயற்பாடு

தற்போதைய அரசியல் யாப்பின்கீழ் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் பொருட்டு நடைபெறும் தேர்தலைப்போல ஒரு தேர்தலின் மூலம் வகுப்புத் தலைவரைத் தெரிவு செய்யுங்கள்.

**1948 இல் சுதந்திரம் பெற்ற பின்னர் அரசியல் அரங்கில் தலைமை வகித்த தலைவர்கள் சிலரின் வாழ்க்கைச் சரிதையை அறிய முற்படுவோம்.**

## திரு.என்.எம். பெரேரா அவர்கள் (1905 ~ 1979)


1905ஆம் ஆண்டு யூன் 06ஆந் திகதி பிறந்த என்.எம்.பெரேரா அவர்கள் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியிலும் கல்கிசை புனித தோமஸ் கல்லூரியிலும் கல்வி பயின்றார். கொழும்பு பல் கலைக்கழகத்தில் பொருளியல் தொடர்பான உயர்ந்த அறிவினைப் பெற்றதோடு, ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று பல உயர்ந்த பட்டங்களைப் பெற்றார். பின்னர் இவர் மாக்ஸிய வாதத்தால் கவரப்பட்டார்.


திரு என்.எம்.பெரேரா

பல்கலைக்கழக விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர் 1935ஆம் ஆண்டு இடதுசாரி தலைவர்களுடன் இணைந்து இலங்கை சமசமாஜக் கட்சியை ஆரம்பித்தார். 1936ஆம் ஆண்டு ருவன் வெலத் தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். மலேரியாத் தொற்றுநோய் வேலைத் திட்டத்தில் மக்கள் சார்பாக இருந்து அவர்களுக்கு நிவாரணம் வழங்கினார். இதனால் இவர் ‘‘பருப்பு ஐயா’’ என்று அழைக்கப்பட்டார்.

1947ஆம் ஆண்டு மீண்டும் ருவன்வெலத் தேர்தல் தொகுதியை வென்ற என்.எம்.பெரேரா எதிர்க்கட்சித் தலைவரானார். 1956ஆம் ஆண்டு திரு. பண்டாரநாயக்க அவர்களின் ஆட்சியின்போதும் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். சிங்கள மொழி அரசமொழியாவது தொடர்பாக நிலவும் சிக்கலான சூழலைத் தெளிவுபடுத்தினார். 1964ஆம் ஆண்டு திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுடன் இணைந்து ஐக்கிய முன்னணியை அமைத்து 1970ம் ஆண்டுத் தேர்தலில் வெற்றி பெற்றார். அந்த அரசில் அவர் நிதி அமைச்சராக இருந்தார். எனினும் கருத்து முரண்பாடு காரணமாக 1975ஆம் ஆண்டு ஐக்கிய முன்னணியிலிருந்து விலகினார். 1977ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தோல்வியுற்ற இவர் 1979ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4ஆந் திகதி மறைந்தார்.

## திரு. கொல்வின் ஆர்.டி. சில்வா (1907 - 1987)



கொல்வின் ஆர்.டி.சில்வா

1907ஆம் ஆண்டு பெப்ரவரி 16ஆந் திகதி கொல்வின் ஆர்.டி.சில்வா பிறந்தார். சி.எம்.எஸ் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று, பின்னர் பாணந்துறை சென்ட் ஜோன் வித்தியாலயத்திலும், கொழும்பு றோயல் கல்லூரியிலும் கற்று கொழும்புப் பல்கலைக் கழகத்தினுள் நுழைந்து தமது முதலாவது பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். லண்டன் கிங்ஸ் (Kings) கல்லூரியிலும் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தின் சட்டபீடத்திலும் கற்ற அவர் லண்டன் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுப் பாடத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றார்.

ஐரோப்பாவில் கற்றுக்கொண்டிருக்கும் போதே அங்கு பரவிக் கொண்டிருந்த மார்க் ஸியத் தத்துவங்கள் அவருடைய அரசியல் போக்குகளில் நேரடிப் பாதிப்பை விளைவித்தன. 1931இல் இலங்கைக்குத் திரும்பிய பின்னர் சட்டத் தொழிலில் ஈடுபட்டு புகழ் பூத்த வழக்கறிஞரானார். அக்காலத்தில் பரவிய மலேரியாக் கொள்ளை நோயின்போது மக்களுக்குப் பணியாற்றிய மார்க்ஸீய இளைஞர் அணியின் முன்னணித் தலைவர்களுள் ஒருவராகச் செயற்பட்டார்.

1935ஆம் ஆண்டு டிசம்பர் 12 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட சமசமாஜக் கட்சியின் முதல் தலைவரான இவர் சிறந்த பேச்சாளராக மட்டுமன்றி முன்னணிப் பொது மக்கள் சேவையாளராகவும் தன்னை இணைத்துக் கொண்டார். புரட்சிகரமான இயக்கங்களினூடாக ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தை வழிநடத்தியமையால் இவர் சிறைசெல்லவும் நேர்ந்தது. 1947இல் போல்ஷேவிக் - லெனின் கட்சிப் பிரதிநிதியாக பாராளுமன்றத்தினுள் நுழைந்தார். 1953ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12ஆம் திகதியன்று இடம்பெற்ற 'ஹர்த்தாலை' (அரசாங்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போராட்டம்) வழிநடத்திய இடதுசாரித் தலைவர்களில் முன்னணியில் நின்று மக்கள் மனங்கவர்ந்த தலைவரானார்.

1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்பை உருவாக்குவதில் முன்னணியில் நின்று செயற்பட்ட அவர் 1987ஆம் ஆண்டு பெப்ரவரி 27ஆந் திகதியன்று காலமானார்.

## சேர். ஜோன் கொத்தலாவல (1897 ~ 1980)


சேர்.ஜோன் கொத்தலாவல

1897ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆந் திகதி ஜோன் லயனல் கொத்தலாவல, பம்பலப்பிட்டியில் பணக்காரக் குடும்பமொன்றில் பிறந்தார். உயர்கல்வியைப் பெறுவதற்காக இங்கிலாந்தின் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்திற்குச் சென்ற அவர் ஆங்கில மொழியில் புலமைபெற்றார். தாய்நாடு திரும்பிய பின்னர் டி.எஸ்.சேனாநாயக்க அவர்களை அடியொற்றி தேசிய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார். பின் அதன் முன்னணித் தலைவராகி நாட்டிற்கும் இனத்திற்கும் உண்மையுடனும் அர்ப்பணிப்புடனும் சேவையாற்றினார்.

1931 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் குருநாகல் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1936இல் அரசுக் கழகத்திற்கு மீண்டும் தெரிவு செய்யப்பட்டு பெருந்தெருக்கள், கைத்தொழில்களுக்கான அமைச்சராகச் செயற்பட்டார். அப்போது கஷ்டப் பிரதேசங்களுக்குப் பெருந்தெருக்களை அமைப்பதிலும் கைத்தொழில்களை உருவாக்குவதிலும் பெருஞ்சேவை புரிந்தார். உயர் கல்வித் துறைக்கு அரும்பணியாற்றிய இவர், டி.ஆர்.விஜேயவர்த்தன அவர்களுடன் சேர்ந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தை அமைப்பதிலும் பாடுபட்டார்.

1953இல் இடம்பெற்ற 'ஹர்த்தாலி'ன் போது டட்லி சேனாநாயக்க அவர்கள் பிரதமர் பதவியிலிருந்து விலகிய பின்னர், அப்பதவிக்கு இவர் நியமனம் பெற்றார். அப்போது இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவராகவும் பொருளாளராகவும் பொறுப்பு வகித்துக் கொண்டிருந்தார். 1953ஆம் ஆண்டு ஒக்டோபர் 12 ஆந் திகதி முதல் 1956 ஆம் ஆண்டுவரை இலங்கைப் பிரதமர் பதவியை வகித்தார்.

இலங்கையில் விமானம் ஒன்றைச் சொந்தமாக வைத்திருந்தவரான இவர், ரத்மலானை விமான நிலையத்தை அமைப்பதில் முன்னோடியாகச் செயற்பட்டார். முப்படைகளுக்குமான பயிற்சி நிலையம் ஒன்றை நிறுவுவதற்காகத் தமது 'கந்த வல' வளவையும் அதிலிருந்த தமது சொந்த வீட்டையும் அர்ப்பணிப்புடன் ஈந்த வீரத்தளபதியாவார். 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் 3 ஆந் திகதி காலமான இவர் இலங்கை அரசியல் வரலாற்றில் மிளிரும் ஒரு பாத்திரமாவார்.

## திரு. பிலிப். குணவர்த்தன அவர்கள் (1901 ~ 1972)

1901ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11ஆந் திகதி பொரளுகொட என்ற இடத்தில் பிறந்த பிலிப் குணவர்த்தன அவர்கள் களுஅக்கல சித்தார்த்த பௌத்த வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி பயின்று மொரட்டுவ வேல்ஸ் இளவரசர் கல்லூரியிலும், கொழும்பு ஆனந்தாக் கல்லூரியிலும் கல்வியைத் தொடர்ந்தார். பல்கலைக்கழகம் சென்ற இவர் விவசாயத் துறையில் பட்டம் பெற்றார்.

இங்கிலாந்திலிருந்து இலங்கைக்கு வந்ததும் தலைநகரில் இளைஞர் அமைப்பில் இணைந்து அரசியலில் தம்மை இணைத்துக் கொண்டார். 1933இல் சூரியமல் இயக்கத்தில் இணைந்து ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்துச் சென்றார். அவர் சமதர்மக் கொள்கையால் கவரப்பட்டு சமசமாஜக் கட்சியின் முக்கிய தலைவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். 1950ஆம் ஆண்டு அக்கட்சியில் இருந்து விலகி, புரட்சிகர சமசமாஜக் கட்சியை அமைத்தார்.



திரு.பிலிப் குணவர்த்தன

1956ஆம் ஆண்டு பதவிக்கு வந்த மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியில் முக்கிய தலைவராக விளங்கிய இவர், விவசாய உணவு அமைச்சராக நியமிக்கப் பட்டார். செல்வந்தர்களின் கையில் சிக்கி துன்புற்ற குத்தகை விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு வயல் சட்டத்தை அமுல் செய்வதில் முன்னோடியாகத் திகழ்ந்தார். இந்த அரசாங்கத்தில் அங்கத்துவம் பெற்றிருந்த சிலரின் சூழ்ச்சியால் இவர் விலக வேண்டிய நிலை ஏற்பட்டது.

பிலிப் குணவர்த்தன அவர்கள் இந்நாட்டு மக்களாலும் அறிவாளிகளாலும் மத்தியதர வர்க்கத்தினராலும் மதிக்கப்பட்ட அரசியல்வாதியாவார். இலங்கையின் சமவுடமைஇயக்கத்தின் தந்தை எனக் கருதப்படும் இவர் அரசியலில் புரட்சியாளராகச் செயற்படும்போது மரணத்தைத் தழுவிக் கொண்டார். கிராமத்தில் பிறந்து கிராம மக்களுக்காகவும் தொழிலாளர்களுக்காகவும் போராடிய உயர்ந்த மனிதனாகப் போற்றப்படும் இவர் ''பொருளுகொட சிங்கம்'' என்றும் அழைக்கப்பட்டார்.

## திரு. டட்லி சேனாநாயக்க அவர்கள் (1911 ~ 1973)

பம்பலப்பிட்டிய வஜிராராமையில் ஆரம்பக்கல்வி பயின்ற திரு. டட்லி சேனாநாயக்கா அவர்கள் பன்சலையுடன் நெருங்கிய தொடர்புடைய பௌத்தராவார். கல்வியைப் போன்றே விளையாட்டிலும் திறமையான இவர், இங்கிலாந்தின் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் சட்டக்கல்வி பயின்று 1933ஆம் ஆண்டு தொடக்கம் சட்டத்தரணியாகக் கடமையாற்றி வந்தார்.



திரு டட்லி சேனாநாயக்க

தனது தந்தையைப் பின்பற்றி, நாட்டினதும் மக்களினதும் நன்மை கருதி இந்நாட்டை நெல் உற்பத்தியில் தன்னிறைவாக்க வேண்டும் என்ற நோக்கோடு செயலாற்றினார். விவசாய நிலையங்களை நிறுவுதல், பலநோக்குத் திட்டங்களைச் செயற்படுத்தல், விவசாய அபிவிருத்தியின் பொருட்டுக் குளங்களைப் புனரமைத்தல் போன்றவற்றை மேற்கொண்டார். ஏழை மக்களுக்கு இலவசமாக அரிசி வழங்கியதால் 'சோறு வழங்கிய தந்தை' என அழைக்கப்பட்டார்.

தனது தந்தையின் மரணத்தின் பின்னர் 1952ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முகங்கொடுத்து அதில் வெற்றியடைந்து பிரதமரானார். 1953ஆம் ஆண்டு நிகழ்ந்த ஹர்த்தால் காரணமாக மனந்தளர்ந்து நோயுற்று பிரதமர் பதவியில் இருந்து விலகினார். 1965ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முகங்கொடுத்து திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரை வென்று பிரதமரானார்.

பொருளாதார மந்தநிலை காணப்பட்ட 1965ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலத்தில் பயிர்ச்செய்கையை அதிகரிக்க, வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டார். நாட்டிற்கும், மக்களுக்கும் பணியாற்றி, ஏழைகளுக்கு உதவிய இவர், 1973ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13ஆம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார்.

## திரு.எஸ்.டபிள்யு.ஆர்.டீ. பண்டாரநாயக்க ( 1899 - 1959)


திரு. எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயக்க

உயர் குடியில் பிறந்த சொலமன் வெஸ்ட் றிட்ஜவே டயஸ் பண்டாரநாயக்க அவர்கள் பிறப்பால் கிறிஸ்தவராவார். இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் உயர்கல்வியைப் பெற்று இலங் கைக்குத் திரும்பிய பின்னர் அரசியலில் காலூன்றி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து செயற்படத் தொடங்கினார். 1951 இல் கட்சியின் கொள்கையினால் அதிருப்தி அடைந்து மத்திய கொள்கை ஒன்றைக் கடைப்பிடிப்பதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்தார்.

தேசிய கலாசாரத்தை மதித்த பண்டாரநாயக்க அவர்கள், பௌத்த சமயத் தைத் தழுவினார். சிங்கள பௌத்தர்களுடனான தொடர்பால் இவரது தேசிய உணர்வு உயிர்ப்புப் பெற்றது. தேசிய ஆடைகளை அணிந்து தேசியத் தன்மையுடன் செயற்பட்ட அன்னார் இலங்கையர்களிடையே புதிய கலாசார மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். பண்டாரநாயக்க அவர்களுடைய அரசியல் இயக்கத்தில் முன்னணியில் இடம் பெற்றோரும் பௌத்த குருமாரேயாவர். அன்னாரது வாழ்க்கைத் தத்துவமாக அமைந்தது, ‘‘ மனிதனுடைய முக்கியமான கடமை, மனிதனுக்குச் சேவை செய்வதே’’ என்பதாகும்.

இலங்கை அரசியல் அரங்கில் சுடர்விட்டுத் துலங்கும் தலைவரான பண்டாரநாயக்க அவர்கள், அரசியலில் புதிய புரட்சி ஒன்றை விளைவித் தவராவார். இறுதியில் பௌத்த பிக்கு ஒருவரின் துப்பாக்கிக் குண்டுக்கு அன்னார் இரையாக்கப்பட்டார். இறுதி நேரத்திலும் கூடத் தன்னைக் சுட்ட நபருக்கு மன்னிப்பு வழங்கும் அளவுக்கு உத்தமர் ஒருவராக அவர் திகழ்ந்தார்.

## திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க (1916 - 2000)

1916ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆந் திகதி பலாங்கொடையில் பிறந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ரத்வத்த அவர்கள் இரத்தினபுரி பர்கியூஷன் உயர் தர பாடசாலையிலும் கொழும்பு சென். பிரிஜ்ஜட் கன்னியாஸ்திரிகள் பாடசாலையிலும் கற்றார்.

24ஆவது வயதில் அவர் எதிர்காலத்தில் பிரதமராக வரவிருந்த திரு.எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்களை திருமணம் செய்தார். 1959இல் ஏற்பட்ட பண்டாரநாயக்க அவர்களின் மரணத்தின் பின்னர் 1960இல் எதிர்பாராத விதமாக அரசியலில் பிரவேசித்தார்.

சிங்களத்தை அரச கரும மொழியாக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட அவர் அணிசேராக் கோட்பாட்டைக் கையாண்டு வெளிநாடுகளுடன் நல்லுறவைப் பேணி வந்தார். சமூக வாதக் கோட்பாட்டைக் கைக்கொண்டு செயற்பட்டதோடு, பொதுவுடமை கோட்பாட்டைக் கொண்டு மக்களுக்குப் பெருஞ்சேவை புரிந்தார். தேசியப் பொருளாதாரக் கொள்கையைக் கையாண்ட திருமதி. பண்டாரநாயக்க அவர்கள் பாரியளவிலான அரச கூட்டுத்தாபனங் களையும், சபைகளையும் உருவாக்கினார். இன்றுங்கூட அவை செயற்படுகின்றன.

1970இல் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கீழ் இரண்டாம் முறையும் பிரதமரானார். சமகாலப் பொருளியல் பிரச்சினைகளால் உருவான 1971ஆம் ஆண்டு வாலிபர்களின் கிளர்ச்சிக்கு அஞ்சாமல் முகம் கொடுத்தார்.



திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க

கல்வித்துறையில் பாரிய மாற்றத்திற்கு வழிவகுக்கும் வண்ணம் தனியார்துறையிடமிருந்த பாடசாலைகளை தேசிய உடைமையாக்கினார். பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளின் கட்டுப்பாடுகளிலிருந்து பூரணமாக விடுவித்து, இலங்கையைக் குடியர சாக்கினார். முதலாவது குடியரசு யாப்பு இவரது தலைமையிலேயே உருவாக்கப்பட்டது.


அதேபோன்று 1976ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கொழும்பில் அணிசாரா இயக்க மகாநாட்டை நடத்த முடிந்தமை பாரியதொரு நிகழ்வாகும். மேலும் 24 வருடங்களாக தீர்க்கப்படாமல் இருந்த இந்தியக் குடியுரிமைப் பிரச்சினை தொடர்பாக இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி அவர்களுடன் பேசி இப்பிரச்சினையைத் தீர்த்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

1980இல் திருமதி பண்டாரநாயக்க அவர்களின் பிரஜாவுரிமையைப் பறித்து பாராளுமன்றத்தில் இருந்து அவரை வெளியேற்ற ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுத்தது. என்றாலும் 1994இல் மூன்றாம் முறையாகவும் அவரால் பிரதமராக வரமுடிந்தது. 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10 ஆந் திகதி பொதுத் தேர்தல் நடைபெற்ற அதே தினத்தில் மாரடைப்பால் அன்னார் காலமானார். நாற்பது ஆண்டுகளாக அரசியல் அரங்கில் பிரகாசித்த அன்னார் சிறந்த அரசியல் தலைவர்களில் ஒருவராவார். உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற சிறப்பும் இவரையேசாரும்.

## திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தன (1906 - 1996)

ஜூனியஸ் ரிச்சர்ட் ஜயவர்த்தன அவர்கள் 1906ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ஆந் திகதி பிறந்தார். இவர் கொழும்பு றோயல் கல்லூரியின் தலைசிறந்த மாணவர்களுள் ஒருவராவார். 1925இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் நுழைந்து உயர் கல்வியைத் தொடர்ந்தார். 1928இல் சட்டக் கல்லூரியில் கல்வியை நிறைவு செய்து 1931 இல் வழக்கறிஞராகத் தொழில் வாழ்க்கையை ஆரம்பித்தார். அத்துறையில் மிகவும் புகழ்பெற்றவரானார்.

பௌத்த சமயம் மற்றும் சிங்கள கலாசாரம் இயல்பான எளிமையான வாழ்க்கையை மதித்த இவர் 1939 இல் அக்கால அரசியல் அரங்கில் புகழ்பெற்றுத் திகழ்ந்த சேனாநாயக்காக்களின் வழிகாட்டலில் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டார். 1940இல் கொழும்பு நகரசபை அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டார். 1944 இல் சிங்களத்தை மட்டும் அரசாங்க மொழியாக்க வேண்டும் என்ற தீர்மானமொன்றை அரசுக் கழகத்தில் முன்வைத்தார். 1947இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலின் மூலம் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். ஐக்கிய தேசியக் கட்சியில் பல பதவிகளையும் வகித்துள்ளார்.



திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தன

இலங்கையில் முதலாவது பாராளுமன் றத்தில் நிதி அமைச்சராகவும் திரு.ஜோன் கொத்தலாவலையின் அமைச்சரவையில் விவசாய உணவு அமைச்சராகவும் பதவிகளை வகித்தார். டட்லி சேனாநாயக்கவின் மரணத் தைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்ற இவர், கட்சியை

பிரபல்யமானதாகக் கட்டியெழுப்பினார். 1977ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் வரலாற்றுப் புகழ்பெற்ற வெற்றியைப் பெற்று பிரதமரானார். பின்னர் 1978இல் இரண்டாவது குடியரசின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது ஜனாதிபதியானமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

1978இல் இரண்டாவது குடியரசு யாப்பும், நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையும் இவரது தலைமைத்துவத்தில் உருவாக்கப்பட்டமை சிறப்பம்சமாகும். மகாவலித் திட்டத்தைச் செயற்படுத்தி விவசாய, கைத்தொழில் துறைகளில் அபிவிருத்தியை ஏற்படுத்தினார். ஏழை மக்களுக்கு காணி, தொழில் என்பவற்றைப் பெற்றுக் கொடுத்தார். விக்டோரியா, ரந்தெனிகல போன்ற மகாவலி அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தினார். 1977இல் திறந்த பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் உலகத்துடன் ஒன்றிணைந்த சிரேஷ்ட தலைவரானார்.


1982இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று இரண்டாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக ஜே. ஆர் ஜெயவர்தனா அவர்கள் பதவிற்று 10 வருடங்களுக்கு மேலாக பதவியிலிருந்தார். அணிசேரா நாடுகளுடன் வல்லரசுகளான ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ரஷ்யா போன்றவற்றுடன் நல்லுறவுகளைப் பேணி வந்தார். ஜப்பான் நாடு இவர் மீது விசேட ஈடுபாடு கொண்டு உதவி, ஒத்தாசைகளைப் புரிந்தது. சிரமமான காலகட்டம் ஒன்றில் ஆட்சியை நடத்திச் செல்வதற்கு இவரது பரந்த அரசியல் அனுபவம் உறுதுணையாய் அமைந்தது.

## சுருக்கம்

சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியல் வளர்ச்சிபற்றி இதுவரை கற்ற நீங்கள் கீழ்வரும் விடயங்கள் பற்றி அறிந்து கொண்டிருப்பீர்கள்.



- 1948ல் பிரித்தானியப் பேரரசில் இருந்து மீண்டும் இலங்கை சுதந்திரம் பெற்றது.
- பல்வேறு தேர்தல்களில் அரசியல் கட்சிகளின் கொள்கைகள் செல்வாக்குச் செலுத்திய விதம்
- தேர்தலில் செல்வாக்குச் செலுத்திய அரசியல், சமூக, பொருளாதார, கலாசார பிரச்சினைகளும் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் அவற்றைத் தீர்க்க மேற்கொண்ட நடவடிக்கைகளும்
- 1972ல் முதலாவது குடியரசு அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டமை
- நிறைவேற்று ஜனாதிபதி முறையைக் கொண்ட இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பின் முக்கிய இயல்புகள்



## செயற்பாடு

வகுப்பைப் பாராளுமன்றமாக மாற்றி அமர்வு ஒன்றை நடத்துக. சபாநாயகர் உட்பட பாராளுமன்ற உத்தியோகத்தர்களை நியமித்து, ஏதாவது ஒரு பிரச்சினையை மட்டும் கலந்துரையாடும் அமர்வாக அது இருக்க வேண்டும். (ஆசிரியரின் வழிகாட்டுதலைப் பெற்றுக் கொள்க)